சாட்சிய வாக்கு மூலம்

(அத்தியாயம் 25 பாரதிய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா)

1989 ஆண்டு இயற்றப்பட்ட பட்டியல் சாதியினர் மற்றும் பழங்குடியினர்

( வன்கொடுமை தடுப்பு ) சட்டத்தின் கீழான

வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு நீதிமன்றம் ,

திருவாரூர் - 610 001.

தேதி: 06.04.2026.

| | | |
|---|---|---|
| சிறப்பு அமர்வு வழக்கு எண். | : | **107/2025** |
| சாட்சியின் வரிசை எண். | : | அ.சா-4 |
| சாட்சியின் பெயர் | : | சுமதி |
| கணவர் பெயர் | : | சங்கர் |
| கிராமம் | : | கீழமாங்குடி |
| தாலுக்கா | : | நன்னிலம் |
| தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| வயது | : | 50 |

2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 06 ஆம் நாள் ஆகிய இன்று இந்த நீதிமன்றத்தில் இளநிலை உதவியாளராக பணிபுரியும் திரு.ஆர்.வீரபாண்டியன் அவர்களால் இந்த சாட்சிக்கு 1969-ம் ஆண்டு உறுதிமொழி சட்டத்தின் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு அதன் அடிப்படையில் சாட்சிய வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

3 முதல் 6 மற்றும் 8 எதிரிகள் ஆஜர். 1ம் எதிரி வேறு வழக்கில் சிறையுள்ளார். P.T வாரண்ட் மூலம் காணொலி காட்சி வாயிலாக ஆஜர் படுத்தப்பட்டுள்ளார். அரசு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் நன்னிலம் வட்டம், கீழமாங்குடியில் வசித்து வருகிறேன். என்னுடன் எனது கொளுந்தனார் மகன் 2 வயதிருந்த சந்தோஷ், எனது மாமியார்

ஆகியோருடன் வசித்து வருகிறேன். கடந்த 19.01.2011 ஆம் தேதி மாலை 7.30 மணியளவில் எனது வீட்டில் உள்ள சமையல் அறையில் நான் சமைத்துக் கொண்டிருந்தபோது எனது கொளுந்தனார் மகன் 2 வயதிருந்த சந்தோஷ் சத்தம் போட்டான், அதனால் பயந்துகொண்டு எனது கொளுந்தனார் மகனை நான் தூக்கிக்கொண்டேன். தொடர்ந்து சத்தம் போட்டதால் அவனை நான் தூக்கிக்கொண்டு எனது வீட்டில் பின்புறம் சென்றேன். அப்போது எனது மாமியார் லெட்சுமி மீன் கழுவி எடுத்துக்கொண்டு வந்தார். பின்னர் என் வீட்டில் உள்ள ஹாலில் இருந்து பயங்கர சத்தம் வந்தது. இதனால் நானும் எனது மாமியாரும், எனது கொளுந்தனார் மகன் சந்தோஷ் ஆகியோருடன் வீட்டின் பின்புறமாக வெளியே சென்றுவிட்டோம். பின்னர் ஊர்காரர்களுடன் வந்து எங்கள் வீட்டிற்கு வந்தோம். அப்போது எங்கள் வீட்டில் ஒருவரை யாரோ வெட்டிப்போட்டு விட்டதாக சொன்னார்கள். நாங்கள் பயந்துகொண்டு வீட்டிற்குள் போகவில்லை. தெருவில் உள்ள எனது உறவினர் வீட்டில் சென்று தங்கிக்கொண்டோம். மறுநாள் போலீசார் வந்து விசாரித்தார்கள். நான் அவர்களிடம் தற்போது நீதிமன்றத்தில் சொன்ன விபரங்களை தான் சொன்னேன்.

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**: இல்லை.

சாட்சி சொல்ல சொல்ல என் உத்தரவுப்படி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னிலையில் தட்டச்சு செய்யப்பட்டு பின் சாட்சியிடம் மேற்படி வாக்குமூலம் படித்துக் காண்பித்த போது சாட்சி சரியென்று என் முன்பாக கையொப்பம் செய்தார்.

VADIVEL M

Digitally signed by VADIVEL M
Date: 2026.04.06 18:28:15 +0530

அமர்வு நீதிபதி,
எஸ்.சி /எஸ்.டி (வன்கொடுமை தடுப்பு )
வழக்குகளை விசாரிப்பதற்கான சிறப்பு
நீதிமன்றம், திருவாரூர்.